# TET_JULY_2024_2A _ LANGUAGE_ TAMIL
# MORNING S1_03.10.2024

1. As per the theory of Moral Development of Lawrence Kohlberg the level between 14 years to Adult stage
   1. Pre - conventional
   2. Conventional
   3. Post conventional
   4. West conventional

   லாரென்ஸ் கோல்பர்கின் அறநெறி வளர்ச்சிக் கொள்கையின் படி, 14 வயது முதல் முதிர்ச்சி பருவம் வரை உள்ள நிலையை இவ்வாறு அழைப்பர்
   1. முன் மரபு நிலை
   2. மரபு நிலை
   3. பின் மரபு நிலை
   4. மேற்கத்திய மரபு நிலை

2. One of the following is the founder of behaviourism
   1. Max Wertheimer
   2. John. B. Watson
   3. Sigmund Freud
   4. Jean Piaget

   கீழ்க்கண்டவர்களில் நடத்தையியலை நிறுவியவர்
   1. மாக்ஸ் வர்த்மயர்
   2. ஜான்.பி.வாட்சன்
   3. சிக்மண்ட் பிராய்டு
   4. ஜீன் பியாஜே

3. As per classification of Elizabeth Hurlock the stage between 6 to 10 years is

1. Late childhood
2. Adolescence
3. Early childhood
4. Puberty

எலிசபத் ஹர்லாக்கின் படி, 6 முதல் 10 வயது வரையிலான நிலை

1. பின் குழந்தைப் பருவம்
2. குமரப் பருவம்
3. முன் குழந்தைப் பருவம்
4. வயது வரும் பருவம்

4. The following is known as 'Clinical method'

1. Experimental method
2. Correlational study
3. Longitudinal method
4. Case study method

கீழ்க்கண்டவற்றில் ஒன்று 'மனைசார் முறை' எனவும் அழைக்கப்படுகிறது

1. பரிசோதனை முறை
2. ஒப்புறவு ஆய்வு முறை
3. நெடுநிலை ஆய்வு முறை
4. தனியாள் ஆய்வு முறை

5. According to Erikson's theory of Psycho – social development, 'Industry – inferiority' is found in

1. Play age
2. School age
3. Adolescence
4. Adulthood

எரிக்சனின் உள சமூக வளர்ச்சியின் படி, 'கடின உழைப்பு - தாழ்வு மனப்பான்மை' என்பது இதில் காணப்படும்

1. விளையாடும் பருவம்
2. பள்ளி செல்லும் பருவம்
3. குமரப் பருவம்
4. முதிர் பருவம்

6. "Development means that changes in the structure, thought or behaviour of a person which occur as function of both biological and environmental influences". This statement is given by

1. Anderson
2. Crow & Crow
3. Craig
4. Hurlock

"ஒரு நபரின் உடலமைப்பு, நடத்தை அல்லது சிந்தனையில் தோன்றும் மாற்றம் வளர்ச்சி. இது உயிரியல் சார்ந்த மற்றும் சுற்றுப்புறத்தின் விளைவாக தோன்றுகிறது" என தெரிவித்தவர்

1. ஆண்டர்ஸன்
2. குரோ & குரோ
3. கிரைக்
4. ஹர்லாக்

7. General factor (G) and Specific factors (S) in intelligence were proposed by

1. L. L. Thurstone
2. Guilford
3. D.W. Weschler
4. Spearman

நுண்ணறிவு என்பதில் பொது காரணி (G) மற்றும் குறிப்பிட்ட காரணி (S) என்பவற்றை தெரிவித்தவர்

1. L. L. தர்ஸ்டன்
2. கில்பர்ட்
3. D.W. வெஸ்லர்
4. ஸ்பியர்மன்

8. A person’s strong feeling of importance towards an activity or subject is known as

1. attitude
2. interest
3. aptitude
4. intelligence

ஒரு செயல் அல்லது பொருள், ஒரு நபருக்கு மிக முக்கியம் என எண்ணுதல் இவ்வாறு அழைக்கப் படுகிறது

1. மனப்பான்மை
2. ஆர்வம்
3. நாட்டம்
4. நுண்ணறிவு

9. As per Elizabeth Hurlock's book "Developmental Psychology: A Life Span Approach" is not a type of social group.

1. Unorganized groups
2. Cliques
3. Crowds
4. Gangs

எலிசபத் ஹர்லாக் புத்தகம் "Developmental Psychology: A Life Span Approach"ன் படி, சமூககுழு வகை அல்லாதது

1. ஒழுங்கமைக்கப்படாத குழு
2. கிளிக்ஸ்
3. கூட்டம்
4. கூட்டுக்குழு

10. "A loser in love turns into a poet" is related to the following defense mechanism

1. Reaction formation
2. Sublimation
3. Withdrawal
4. Displacement

'காதலில் தோல்வியுற்றவர் கவிஞராக மாறுகிறார்' என்பது கீழ்க்கண்ட தற்காப்பு நடத்தை

1. எதிர்வினை உருவாக்கம்
2. மடைமாற்றம்
3. பின்வாங்குதல்
4. இடமாற்றம்

11. This learning theory includes attention, retention, performance and motivation (Reinforcement)

1. Classical conditioning
2. Operant conditioning
3. Insightful learning
4. Learning through observation

கீழ்க்கண்ட கற்றல் கொள்கை கவனித்தல், நிலை நிறுத்துதல், செயல்திறன், ஆயத்தம் முதலியவற்றை கொண்டது

1. பண்டைய ஆக்க நிலையிறுத்தல்
2. தன்னிச்சையான ஆக்க நிலையிறுத்தல்
3. உட்காட்சி கற்றல்
4. உற்றுநோக்கல் கற்றல்

12. When learning or training in one situation inhibits the learning in another situation, it is known as

1. Positive Transfer of learning
2. Negative Transfer of learning
3. Zero Transfer of learning
4. Bilateral transfer of learning

ஒரு சூழ்நிலையில் கற்றல் அல்லது பயிற்சி என்பது மற்றொரு சூழ்நிலையில் கற்றலை தடுத்தல் – இது

1. நேர்மறை கற்றல் மாற்றம்
2. எதிர்மறை கற்றல் மாற்றம்
3. பூஜ்ஜிய கற்றல் மாற்றம்
4. இருபக்க கற்றல் மாற்றம்

13. “Offering ‘praise instead of blame’, ‘reward rather than punishment’ leads to better outcomes” is said by

1. Bernhard
2. Coleman
3. Hurlock
4. Murray

“‘இகழ்தலைவிட புகழ்தல்’, ‘தண்டனையைவிட வெகுமதி’ சிறந்த முடிவுகளை தருகிறது” என கூறியவர்

1. பெர்ன்ஹார்ட்
2. கோல்மன்
3. ஹர்லாக்
4. முர்ரே

14. ‘The understanding of touching current wires with bare hands can cause electric shock, where as utilizing thick plastic gloves eliminates the risk’ which concept formula is this?

1. Specific to General
2. General to Specific
3. Exception
4. Discrimination

‘மின்சார கம்பியை வெறும் கையால் தொடும் போது மின்தாக்கத்தை உண்டாக்கும் என தடிமனான பிளாஸ்டிக் கையுறைகளை அணிந்து தொடும்போது மின்தாக்கம் விளையாது என அறிந்திருத்தல்’ இவ்வாறான கருத்து

1. குறிப்பிட்டதிலிருந்து பொதுவானது
2. பொதுவானதிலிருந்து குறிப்பிட்டது
3. விதிவிலக்கு
4. வேறுபடுத்துதல்

15. The following Gestalt principle states that the elements that are similar to each other tend to be perceived as a group.

1. Law of Proximity
2. Law of Similarity
3. Law of closure
4. Law of continuity

இந்த கீழ்க்கண்ட கெஸ்டால்ட் கோட்பாடு ஒரே மாதிரியான அம்சங்களை ஒரு குழுவாக அமைக்கலாம் என தெரிவிக்கிறது

1. அணுக்க விதி
2. ஒப்பமைவு விதி
3. நிரப்புகை விதி
4. தொடர்ச்சி விதி

16. A baby cannot perform the action properly because it has not reached the right age. The factor that influences the learning is

1. Moral
2. Physical
3. Environmental
4. Social

தகுந்த வயதை அடையாததால் ஒரு குழந்தை ஒரு செயலை சரியாக செய்ய இயலவில்லை. இதில் அடங்கியுள்ள கற்றலை பாதிக்கும் காரணி

1. அறநெறி காரணி
2. உடலியல் காரணி
3. சுற்றுப்புற காரணி
4. சமூக காரணி

17. One of the following is related to psychomotor domain

1. Responding
2. Precision
3. Characterization
4. Understanding

கீழ்க்கண்டவற்றில் உள இயக்கம் சார் களத்துடன் தொர்புடையது

1. துலங்குதல்
2. நுட்பம்
3. பண்பாதல்
4. புரிந்துக்கொள்ளுதல்

18. The type of learning curve arises while learning items with prior knowledge

1. Convex
2. Concave
3. Parallel to X - axis
4. Parallel to Y - axis

முந்தைய அறிவுடைய கருத்துகளை கற்கும் போது தோன்றும் கற்றல் வளைவரை வகை

1. குவி
2. குழி
3. X – அச்சிற்கு இணையாக
4. Y – அச்சிற்கு இணையாக

19. 'Memorization through experimentation' – this type of memory is

1. Rote memory
2. Short term memory
3. Immediate memory
4. Active memory

'பரிசோதனைகள் நிகழ்த்துவதன் வாயிலாக நினைவில் நிறுத்துதல்' எவ்வகையான நினைவு

1. நெட்டுரு நினைவு
2. குறுகிய கால நினைவு
3. உடனடி நினைவு
4. செயல்படும் நினைவு

20. Each learner has a unique way of learning. This is called as

1. Learning readiness
2. Learning style
3. Level of aspiration
4. Achievement motivation

ஒவ்வொரு கற்பவரும் கற்கும் போது தனக்கென்று ஒரு பிரத்யேக முறையில் கற்பார். இதை இவ்வாறு அழைப்பர்.

1. கற்றல் ஆயத்தம்
2. கற்றல் பாணி
3. விருப்ப நிலை
4. அடைவுத்திறன் ஊக்கம்

21. 'Netiquettes' refers to

1. Online games
2. Online counselling
3. Online guidance
4. Rules of content to be followed in internet

'Netiquettes' என்பது

1. ஆன்லைன் விளையாட்டுகள்
2. ஆன்லைன் கலந்தாய்வு
3. ஆன்லைன் வழிகாட்டல்
4. இணையதள பயன்பாட்டில் பின்பற்றவேண்டிய விதிமுறைகள்

22. International Day of 'Children's Right's' is

1. November 14
2. November 20
3. November 23
4. November 18

சர்வதேச 'குழந்தை உரிமைகள்' நாள்

1. நவம்பர் 14
2. நவம்பர் 20
3. நவம்பர் 23
4. நவம்பர் 18

23. According to NCF – 2005 The main aim of 'Teaching'

1. Construction of Knowledge
2. Completion of Syllabus
3. Developing ICT Skills
4. Providing Home work

NCF – 2005 ன் படி, கற்பித்தலின் முக்கிய நோக்கம்

1. அறிவை கட்டமைத்தல்
2. பாடதிட்ட பொருளடக்கத்தை நிறைவு செய்தல்
3. ICT திறன்களை வளர்த்தல்
4. வீட்டுப்பாடம் அளித்தல்

24. Number of sections in RTE – 2009

RTE – 2009 ல் உள்ள பிரிவுகளின் எண்ணிக்கை

1. 30
2. 45
3. 38
4. 35

25. According to NEP – 2020 Education stages are

NEP – 2020 ன் படி, கல்வி நிலைகள்

1. 10 + 2 + 3
2. 5 + 3 + 3 + 4
3. 5 + 3 + 5 + 3
4. 5 + 4 + 4 + 3

26. ‘ECCE’ stands for

‘ECCE’ ன் விரிவாக்கம்

1. Early Childhood Care and Education
2. Early Child Care and Evaluation
3. Early Child Council of Education
4. Early Childhood Council and Education

27. The programme ‘SWAYAM’ is maintained by

1. Ministry of Human Rights
2. Ministry of Education
3. NIVO
4. RIE

‘SWAYAM’ எனும் நிகழ்ச்சியை நடத்தும் நிறுவனம்

1. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்
2. கல்வித்துறை அமைச்சகம்
3. NIVO
4. RIE

28. ‘CD’ stands for

‘CD’ என்பதன் விரிவாக்கம்

1. Computer Disk
2. Computer Desktop
3. Compact Desktop
4. Compact Disc

29. ‘Scaffolding’ was introduced by

1. Skinner
2. Bandura
3. Vygotsky
4. Thorndike

‘Scaffolding’ என்பதை அறிமுகப்படுத்தியவர்

1. ஸ்கின்னர்
2. பண்டூரா
3. வைகோட்ஸ்கி
4. தார்ண்டைக்

30. ‘Apex’ is an example of

‘Apex’ என்பது இதற்கு உதாரணம்

1. Blog
2. Google classroom
3. Twitter
4. Forum

31. கீழ்க்காணும் பாடலை படித்து, வினாவிற்கு விடையளி.

நீலக் கடலினிலே – நின்றன்
நீண்ட குழல் தோன்றுதடி

இப்பாடலில் ‘குழல்’ என்பதன் பொருள்

1. புல்லாங்குழல்
2. ஊதுகுழல்
3. முடி
4. குடை

32. கீழ்க்காணும் பாடலைப் படித்து, வினாவிற்கு விடையளி.

தனியொருவனுக் குணவி லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

இப்பாடல் வலியுறுத்தும் கருத்து

1. மார்க்சீயப் புரட்சி
2. தொழிற் புரட்சி
3. பசுமைப் புரட்சி
4. வெண்மைப் புரட்சி

33. கீழ்க்காணும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாவிற்கு விடையளி.

உலகம் முழுவதும் கல்வி என்பது செல்வம் மிக்கவர்களின் தனியுரிமையாக இருந்து வந்தது. நடுத்தர மக்களும், கடைநிலை மக்களும், பெரும் பொருளை செலவிட்டுத் தம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுத்தர முடியவில்லை.

கல்வி என்பது இவர்களுடைய உரிமையாக இருந்தது

1. நடுத்தர மக்கள்

2. செல்வம் மிக்கவர்

3. கடைநிலை மக்கள்

4. பழங்குடியினர்

34. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாவிற்கு விடையளி.

தமிழ்த்தாத்தா என அழைக்கப்படும் டாக்டர். உ.வே.சா அவர்கள் ஊர் ஊராகச் சென்று, செல்லுக்கும் கரையானுக்கும் இரையாகிக் கொண்டிருந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் திரட்டி வந்து அவைகளை திருத்தமான முறையில் பதிப்பித்தார். இவர் புதியதும் பழையதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி முதலிய உரைநடை நூல்களை இயற்றினார்.

உ.வே.சா இயற்றிய நூல்களில் இல்லாதவை

1. கண்டதும் கேட்டதும்

2. புதியதும் பழையதும்

3. நினைவு மஞ்சரி

4. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

35. ‘விளைவு’ – என்னும் சொல்லின் பொருள்

1. வளர்ச்சி
2. அதிர்ச்சி
3. வறட்சி
4. மலர்ச்சி

36. ‘ஆறு’ என்னும் சொல்லின் இருபொருள்

1. படி, எண்
2. நதி, படி
3. எண், வழி
4. இருப்பிடம், வழி

37. ‘கவிமணி’ என்னும் அடைமொழி பெற்றவர்

1. தாரா பாரதி
2. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
3. முடியரசன்
4. தேசிக விநாயகனார்

38. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற காரணமாக அமைந்தது

1. இசைக்கலை
2. அச்சுக்கலை
3. ஓவியக்கலை
4. நுண்கலை

39. ‘கால் கழுவி வந்தான்’ என்பது இவ்வகை வழக்கு

1. குழூஉக்குறி
2. மரூஉ
3. மங்கலம்
4. இடக்கரடக்கல்

40. ‘இச்செயலை செய்தது மங்கையா? மணிமேகலையா? ’ என வினவுதல் இவ்வகை வினா

1. அறியா வினா
2. அறிவினா
3. ஐயவினா
4. ஏவல் வினா

41. மருக்கொழுந்து நட்டான் இவ்வகை ஆகுபெயர்

1. சினையாகு பெயர்
2. கருவியாகு பெயர்
3. பண்பாகு பெயர்
4. கருத்தாவாகுபெயர்

42. பொருந்தாத குற்றியலுகரத்தைக் கண்டுபிடி

1. அரசு
2. எஃகு
3. கயிறு
4. வரலாறு

43. ‘சொல் களிறு’ – இவ்வகைத் தொகை

1. உம்மைத் தொகை
2. உவமைத் தொகை
3. பண்புத்தொகை
4. வினைத்தொகை

44. வல்லினம் மிகா இடத்தைக் கண்டுபிடி.

1. இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
2. இரண்டாம் வேற்றுமைத்தொகை
3. ஆறாம் வேற்றுமைத் தொகை
4. ஓரெழுத்து ஒரு மொழி

45. பொருத்துக.

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 1. தமிழர் சால்பு | – | அ. சுஜாதா |
| 2. அக்னிச் சிறகுகள் | – | ஆ. ஆயிஷா நடராஜன் |
| 3. மின்மினி | – | இ. அப்துல் கலாம் |
| 4. ஏன் எதற்கு, எப்படி | – | ஈ. சு. வித்யானந்தன் |

1. 1–ஈ, 2–இ, 3–ஆ, 4–அ
2. 1–ஆ, 2–இ, 3–அ, 4–ஈ
3. 1–அ, 2–இ, 3–ஆ, 4–ஈ
4. 1–ஈ, 2–இ, 3–அ, 4–ஆ

46. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது

1. எழுத்து மொழி
2. ஓவிய மொழி
3. பேச்சு மொழி
4. கலை மொழி

47. ‘தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’ என்று பாடியவர்

1. பாரதிதாசன்
2. பாரதியார்
3. வாணிதாசன்
4. கண்ணதாசன்

48. அசைஇ – இச்சொல்லுக்குரிய அளபெடை

1. செய்யுளிசை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. இசைநிறை அளபெடை
4. சொல்லிசை அளபெடை

49. பெரும்பாலும் இடைநிலைக்கும், விகுதிக்கும் இடையே இடம்பெறும் பகுபத உறுப்பு

1. சாரியை
2. சந்தி
3. பகுதி
4. இடைநிலை

50. ‘பிறர்நாணத்’ – இச்சொல்லை அலகிடுக.

1. நேர், நிரை, நேர்
2. நிரை, நேர், நேர்
3. நிரை, நிரை, நேர்
4. நேர், நேர், நிரை

51. கீழ்க்காண்பனவற்றை கவனி.

கூற்று A. சுரமும் சுரம் சார்ந்த இடம் பாலை
கூற்று B. நெய்தல் ஆறு பெரும்பொழுதுகள் கொண்டது

1. கூற்று A மற்றும் B தவறு
2. கூற்று A சரி, கூற்று B தவறு
3. கூற்று A மற்றும் B சரி
4. கூற்று A தவறு, கூற்று B சரி

52. துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

– இக்குறளில் பயின்று வந்துள்ள அணி

1. சொல்பின்வருநிலையணி
2. சொற்பொருள் பின்வரு நிலையணி
3. பொருள் பின்வருநிலையணி
4. உருவக அணி

53. பாரதியார் குயில்பாட்டை இயற்றினார் – செய்வினைத் தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக.

1. பாரதியாரால் குயில்பாட்டு இயற்றப்பட்டது
2. குயில்பாட்டை பாரதியார் இயற்றினார்
3. பாரதியார் குயில்பாட்டு இயற்றினார்
4. குயில்பாட்டு பாரதியாரால் இயற்றப்பட்டது

54. கபிலருக்கு நண்பர் பரணர் – இவ்வகை வேற்றுமை

1. ஏழாம் வேற்றுமை
2. நான்காம் வேற்றுமை
3. ஐந்தாம் வேற்றுமை
4. ஆறாம் வேற்றுமை

55. சொல்பொருள் : உபகாரி

1. வள்ளல்
2. கிருமி
3. துணையானை
4. துணைவன்

56. சேர்த்து எழுதுக : என்று + உரைக்கும்

1. என்றிரைக்கும்
2. என்றுஉரைக்கும்
3. என்றுரைக்கும்
4. என்றரைக்கும்

57. பிரித்து எழுதுக : ஐம்பால்

1. ஐம் + பால்
2. ஐந்து + பால்
3. ஐம்பது + பால்
4. ஐ + பால்

58. எதிர்ச்சொல் : அணுகு x

1. நெருங்கு
2. மருங்கு
3. சுருங்கு
4. விலகு

59. வல்லின எழுத்துகள்

1. க, ச, ட, த, ப, ற
2. ங, ஞ, ண, ந, ம, ன
3. க, ச, ட, த, ப, ர
4. க, ச, த, ந, ப, ர

60. சரியான அகர வரிசையில் காண்

1. ஆசை, அன்பு, உயிர், ஊக்கம்
2. சான்று, சுற்றம், செலவு, சொத்து
3. சேட்டை, சொந்தம், சாமை, சரிவு
4. இலை, ஈட்டி, கை, அம்மா

61. The aspiring musician faced a bigger challenge than most: She was profoundly deaf.

An aspiring person is

1. content
2. ambitious
3. settled
4. unmotivated

62. It is not the little girl's fault, Mr. Jones. I think the geography sector was geared a little too quick.

Identify the antonym of 'fault' in the context of the sentence:

1. regret
2. mistake
3. negligence
4. merit

63. He ________ a visa because he had been in prison.

Identify the best option that fits the blank.

1. refuses
2. has refused
3. was refused
4. refused

64. Choose the prefix that means 'self'.

1. inter
2. auto
3. super
4. multi

65. To break the ice, Maria started with a joke about her vacation mishaps.

Identify the meaning of ‘break the ice’ in the sentence above:

1. to start a conversation in a social setting
2. to cool down a heated space
3. to fix a broken object
4. to freeze a drink

66. Choose the meaning of the phrasal verb: “break down”

1. to make something stronger
2. to stop working
3. to start functioning
4. to build up

67. Identify how the word ‘Discrepancy’ should be alphabetized in relation to ‘Discretion’.

1. Discrepancy should come before Discretion.
2. Discrepancy should come after Discretion
3. Discrepancy and Discretion should be listed together.
4. Discrepancy and Discretion are unordered.

68. Identify the correctly punctuated sentence with an address:

1. They live at 123 Maple street Los Angeles California.
2. They live at 123 Maple street, Los Angeles California.
3. They live at 123 Maple street Los Angeles, California.
4. They live at 123 Maple street, Los Angeles, California.

69. Besides being a good doctor, Sheena is a great artist.

Choose the correct transformation of the simple sentence into a complex sentence:

1. Sheena is a good doctor, and she is a great artist too.
2. Although Sheena is a good doctor, she is also a great artist.
3. Sheena is a great artist as well as a good doctor.
4. Sheena is not only a good doctor but also a great dancer.

70. Identify the grammatically correct sentence:

1. The salad is healthier alternate.
2. The salad is a healthier alternative.
3. The salad is healthy alternate.
4. The salad is healthier alternative.

71. Identify the sentence that gives a command

1. Where are you going?
2. Finish your work on time.
3. This is an interesting book.
4. Wow, that's impressive!

72. Identify the correct spelling of the word.

1. recieve
2. receve
3. receieve
4. receive

73. My father said to me, “They are late.”

Choose the correct indirect speech.

1. My father told me that they have been late.
2. My father told me that they were late.
3. My father said to me that they are late.
4. My father said to me that they were late

74. The reason why he quit his job is still a mystery.

Choose the function of the noun clause in the sentence:

1. Subject
2. Predicate
3. Direct object
4. Indirect object

75. One of the following is the term for someone who is an expert in writing by hand:

1. Chirographer
2. Lexicographer
3. Typographer
4. Manuscriptologist

76. In a negative sentence the verb ‘do’ must _______ the subject.

Choose the option that fits the blank.

1. contradict
2. agree with
3. differ from
4. ignore

77. Choose the correct example of a declarative sentence:

1. He is preparing for his exams.
2. Do you like sweets?
3. Open the window.
4. What a surprise!

78. The store was having a sale. ___________, many customers flocked to take advantage of the discounts.

Choose the linker that fits the blank.

1. Nevertheless
2. Hence
3. In Contrast
4. For instance

79. Select the sentence where the definite article is used before the names of musical instruments.

1. Raju is a guitar player.
2. Tabla was invented in north India
3. She taught herself to play veena
4. He plays the violin.

80. "__________ you help me with this problem?"

Choose the modal verb to show a request.

1. Could
2. Will
3. Might
4. Must

81. Identify the sentence that correctly uses 'since' as a subordinating conjunction.

1. I haven't seen him, since last year.
2. She has been happy since she got her new job.
3. It was raining, so we stayed indoors since yesterday.
4. He will wait since morning.

82. Choose the sentence with the correct use of the correlative conjunction pair 'not only … but also'.

1. He is not only tall and also strong.
2. Not only he likes music, but also dancing
3. She is not only intelligent but also kind.
4. Not only the cake delicious but also sweet.

83. When preparing a notice, you should use _______ to ensure the content is easy to read and understand.

Choose the option that fits the blank.

1. complex language and jargon
2. bullet points or numbered lists
3. a small font size
4. variouscolours and fonts

84. The primary purpose of writing a short poem is:

1. to tell a long, detailed story
2. to express thoughts or feelings concisely
3. to create complex characters
4. to provide historical context.

85. One of the following is NOT a rule for forming the Present Perfect Continuous tense. Identify it.

1. use have or has as the auxiliary verb.
2. use ‘been’ after the auxiliary verb.
3. use the present participle form of the main verb.
4. Add ‘ed’ to the base form of the verb.

86. Identify the structure of a positive sentence in the present perfect tense:

1. Subject + have / has + past participle + rest of the sentence.
2. Subject + was / were + verb + ing + rest of the sentence.
3. Subject + will + base form of the verb + rest of the sentence.
4. Subject + is / am / are + verb + ing + rest of the sentence.

87. They are _________ renovating their house.

Choose the preposition that fits the blank.

1. in the process of
2. in front of
3. in light off
4. in back of

88. I am writing ________ your recent enquiry.

Choose the option that can be used to fill in the blank.

1. in case of
2. in exchange for
3. in regard to
4. in process of

89. Read the following passage.

Gender inequality is a pressing concern in India, affecting various aspects of life from education to employment. Women and girls often face discrimination and violence, impacting their opportunities and well-being. Initiatives to promote gender equality and empower women are in place, but cultural and systemic barriers continue to hinder progress.

Identify the statement that best describes the impact of gender inequality in India:

1. it only affects educational opportunities.
2. it impacts both education and employment.
3. it is only related to healthcare.
4. it is a concern only for men.

90. Read the following passage.

Gender inequality is a pressing concern in India, affecting various aspects of life from education to employment. Women and girls often face discrimination and violence, impacting their opportunities and well-being. Initiatives to promote gender equality and empower women are in place, but cultural and systemic barriers continue to hinder progress.

Cultural and systematic barriers continue to __________ progress towards gender equality.

1. accelerate
2. ignore
3. promote
4. hinder

91. தமிழே மிகவும் பண்பட்ட மொழி என்றும், தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி என்று கூறியவர்

1. மாக்ஸ் முல்லர்
2. மாத்யு அர்னால்டு
3. பில்ஸ்பூரி
4. ஹட்சன்

92. தமிழெனும் இனிய தீஞ்சொற் றையல் எனும் செய்யுள் வரி இடம்பெறும் நூல்

1. சீவக சிந்தாமணி
2. சிலப்பதிகாரம்
3. பிங்கலம்
4. மணிமேகலை

93. பதிற்றுப்பத்து இவ்வரசர்களைப் பற்றிப் பாடிய நூலாகும்

1. சோழர்
2. பாண்டியர்
3. சேரர்
4. பல்லவர்

94. கூடற்றமிழ் என்ற பெயரும் இந்நூலக்கு உண்டு

1. முல்லைப் பாட்டு
2. நெடுநல்வாடை
3. குறிஞ்சிப்பாட்டு
4. மதுரைக்காஞ்சி

95. ‘திணைமாலை நூற்றைம்பது’ – எனும் நூலின் ஆசிரியர்

1. சமண முனிவர்
2. கணியன் மேதாவியார்
3. கபிலர்
4. பூதஞ்சேந்தனார்

96. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே.
– இப்பாடல் இவருடையது

1. சுந்தரர்
2. மாணிக்கவாசகர்
3. திருநாவுக்கரசர்
4. திருஞான சம்பந்தர்

97. ‘இராமதேவர்’ என்றும் இவரைக் கூறுவர்

1. கம்பர்
2. ஒட்டக்கூத்தர்
3. பரிமேலழகர்
4. சேக்கிழார்

98. 2022- ல் இந்நூலுக்கு சாகித்திய அகாதமி விருது கிடைத்தது

1. செல்லாத பணம்
2. ஒரு சிறு இசை
3. காலாபாணி
4. இலக்கியச் சுவடுகள்

99. டாக்டர். மு. வரதராசனார் இயற்றிய இறுதி நாவல்

1. பெற்ற மனம்
2. அல்லி
3. வாடாமலர்
4. கரித்துண்டு

100. ‘சூடாமணி நிகண்டு’ இவரால் இயற்றப்பட்டது

1. மண்டலபுருடர்
2. காங்கேயர்
3. ஆண்டிப் புலவர்
4. கலித்துறையான்

101. குருதியின் நதிவெளி பரக்கவே

குடையினும் நுரையென மிதக்கவே

கரிதுணி படுமுடல் அடுக்கியே

கரையென இருபுடை கிடக்கவே

– இப்பாடல் இடம்பெறும் இலக்கியம்

1. தக்கயாகப் பரணி
2. கோவை உலா
3. நளவெண்பா
4. கலிங்கத்துப் பரணி

102. இவர்களின் ஆட்சிக்காலத்தை சமய காலம் என்றும் கூறுவர்

1. பல்லவர்
2. சோழர்
3. நாயக்கர்
4. ஐரோப்பியர்

103. ‘நிரம்பையர் காவலர்’ எனும் பெயரும் இவருக்குண்டு

1. நச்சினார்க்கினியர்
2. அடியார்க்கு நல்லார்
3. பேராசிரியர்
4. பரிமேலழகர்

104. ஆண்டவர் பிள்ளைத் தமிழ் எனும் நூலை இயற்றியவர்

1. வண்ணக்களஞ்சியப் புலவர்
2. சர்க்கரைப் புலவர்
3. அலியார் புலவர்
4. சவ்வாதுப் புலவர்

105. இவர் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அந்நூலின் பெருமையை உலகறியச் செய்தார்.

1. இரேனியுஸ் ஐயர்
2. சீகன் பால்க் ஐயர்
3. போப்பையர்
4. கால்டுவெல் ஐயர்

106. பரிதிமாற் கலைஞர் எழுதிய நாடக நூல்களில் இல்லாதவை

1. ரூபாவதி
2. மனோகரா
3. கலாவதி
4. மானவிஜயம்

107. புதுமைப்பித்தனை இவ்வாறு வழங்குவர்

1. சிறுகதைத் தந்தை
2. சிறுகதை வேந்தன்
3. சிறுகதை மன்னன்
4. சிறுகதை கோமகன்

108. கல்கி எழுதிய இந்நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது

1. வீணை பவானி
2. சோலைமலை இளவரசி
3. மகுடபதி
4. அலையோசை

109. தேனை மறந்திருக்கும் வண்டும் – ஒளிச்
சிறப்பை மறந்து விட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் – இந்த
வைய முழுதுமில்லை தோழி!
– இக்கூற்று இவருடையது

1. பாரதிதாசன்
2. பாரதியார்
3. கவிமணி
4. வெ. இராமலிங்கப் பிள்ளை

110. உ.வே.சா. எழுதிய சுயசரிதையின் பெயர்

1. நெஞ்சுக்கு நீதி
2. நான் ஏன் பிறந்தேன்
3. என்கதை
4. என் சரிதம்

111. பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்
துறையிலா வனச வாவித் துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே

இப்பாடல் வலியுறுத்தும் கருத்து

1. துறவின் சிறப்பு
2. புலமையின் சிறப்பு
3. குழந்தைச் செல்வத்தின் சிறப்பு
4. நகரத்தின் சிறப்பு

112. பொருத்துக.

| நிலம் | தொழில் |
|---|---|
| 1. குறிஞ்சி | – அ. மீன் பிடித்தல் |
| 2. முல்லை | – ஆ. களை பறித்தல் |
| 3. மருதம் | – இ. நிரை மேய்த்தல் |
| 4. நெய்தல் | – ஈ. தேனெடுத்தல் |

1. 1–அ, 2–இ, 3–ஆ, 4–ஈ
2. 1–இ, 2–ஈ, 3–அ, 4–ஆ
3. 1–ஆ, 2–அ, 3–ஈ, 4–இ
4. 1–ஈ, 2–இ, 3–ஆ, 4–அ

113. இந்நூலை முத்தமிழ் காப்பியம் என்றும் கூறுவர்

1. சிலப்பதிகாரம்
2. சீவகசிந்தாமணி
3. மணிமேகலை
4. குண்டலகேசி

114. கீழ்க்காணும் கூற்றுகளை கவனி. எது சரி? எது தவறு? கண்டுபிடி.

கூற்று A: திராவிட சிசு என்று சுந்தரமூர்த்தி நாயனாரை அழைப்பர்

கூற்று B: ஆண்டாள் பாடியது பெருமாள் திருமொழி ஆகும்

1. கூற்று A சரி, கூற்று B தவறு
2. கூற்று A தவறு, கூற்று B சரி
3. கூற்று A மற்றும் B தவறு
4. கூற்று A மற்றும் B சரி

115. தமிழ்நாட்டின் ஜேன் ஆஸ்டின் என அழைக்கப் படுபவர்

1. ராஜம் கிருஷ்ணன்
2. வசுமதி இராமசாமி
3. அநுத்தமா
4. லஷ்மி

116. ஆங்கில மொழி இத்தனை முதலொலிகளை பெற்றுள்ளது

1. முப்பது
2. நாற்பத்தாறு
3. முப்பத்தாறு
4. இருபத்தாறு

117. தமிழில் ‘நாங்கள்’ என்ற தன்மை பன்மை பெயர் கன்னடத்தில் இவ்வாறு கூறுவர்

1. ஓம்
2. மனமு
3. எம்
4. ஆம்

118. மொழிகளின் ஒலிகளைப் பற்றி ஆராய்வது, ஒலியியல் ஒரு மொழியில் முதல் ஒலிகளாகவும் வகையொலி களாகவும் பயன்படும் ஒலிக்கூறுகளை ஆராய்வது இவ்வாறு கூறப்படும்.

1. சொற்பிறப்பியல்
2. மொழியொலியியல்
3. சொற்பொருளியல்
4. பொருளசையியல்

119. வட இந்திய மொழிகளில் இவ்வேற்றுமைகளுக்கு வெவ்வேறு உருபுகள் இல்லை

1. ஐந்தாம், மூன்றாம்
2. இரண்டாம், நான்காம்
3. ஆறாம், இரண்டாம்
4. மூன்றாம், நான்காம்

120. இம்மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது

1. குடகு
2. துளு
3. மராத்தி
4. தோத

121. இம்மொழி அறிவின் முயற்சியால் ஒழுங்கு செய்து அமைக்கப்படும்

1. பேச்சு மொழி
2. ஓவிய மொழி
3. எழுத்து மொழி
4. சித்திர மொழி

122. கடன் வாங்குதல் என்பது ‘போலச் செய்தல்’ என்று இவர் கருதுகிறார்.

1. விட்னே
2. வெண்ட்ரியே
3. யெஸ்பர்ஸன்
4. பிரீல்

123. தெலுங்கு மொழியில் முதன்முதல் இலக்கணமும் இலக்கியமும் இயற்றியவர்

1. கேசவர்
2. நன்னய்யா
3. எழுத்தச்சன்
4. திக்கன்னா

124. கீழ்க்காணும் கூற்றுகளை கவனி. எது சரி? எது தவறு? கண்டுபிடி.

கூற்று A: பகற்கனவு கலை வடிவம் பெறும்

கூற்று B: கற்பனைக் கனவு கலை வடிவம் பெறும்

1. கூற்று A தவறு, கூற்று B சரி
2. கூற்று A மற்றும் B சரி
3. கூற்று A சரி, கூற்று B தவறு
4. கூற்று A மற்றும் B தவறு

125. நூல் ஆராய்ச்சியாளருக்கு இருக்க கூடாத பண்பு

1. தலைகணம்
2. ஒரு சார்பாகக் கோணாமல் இருத்தல்
3. பற்றற்ற நிலை
4. ஆராய்ச்சிக்கு உரிய தகுதி

126. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமையும் பொருள்கோள்

1. அடிமறி மாற்று பொருள்கோள்
2. மொழிமாற்று பொருள்கோள்
3. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
4. தாப்பிசை பொருள்கோள்

127. இருவர் உரையாடுவது போன்ற ஓசை

1. துள்ளலோசை
2. அகவலோசை
3. தூங்கலோசை
4. செப்பலோசை

128. 'செழியன் வந்தது' என்பது இவ்வகை வழுவாகும்

1. இட வழு
2. திணை வழு
3. கால வழு
4. பால் வழு

129. 'கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும், கருத்து முழுமை பெறாத துணைத்தொடரும் வரும் தொடர்'

1. கலவைத் தொடர்
2. தனிச் சொற்றொடர்
3. தொடர் சொற்றொடர்
4. நேர்க் கூற்றுத் தொடர்

130. ‘பனி + காற்று ’ என்பது இவ்வகைப் புணர்ச்சியாகும்

1. மெய்ம் முன் உயிர்
2. உயிர் முன் மெய்
3. மெய்ம் முன் மெய்
4. உயிர் முன் உயிர்

131. செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது இவ்வகை அணியாகும்

1. சொல்பின்வரு நிலையணி
2. சொற்பொருள் பின்வரு நிலையணி
3. பொருள்பின்வரு நிலையணி
4. உருவக அணி

132. சு. சமுத்திரம் இயற்றிய சிறுகதைகளில் இல்லாதவை

1. வாடாமல்லி
2. விடுதலையா?
3. மண்சுமை
4. தலைப்பாகை

133. பெரியார் நடத்திய இதழின் பெயர்

1. தேசபக்தன்
2. விஜயா
3. இந்தியா
4. குடியரசு

134. பெண் எனில் பேதை என்ற எண்ணம்
நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது
– என்பது இவருடைய கூற்றாகும்

1. பாவேந்தர் பாரதிதாசன்
2. பாரதியார்
3. கவிமணி
4. வெ. இராமலிங்கனார்

135. 'பொறுத்தார் பூமியாள்வார்' இத்தொடரில் 'பொறுத்தார்' எனும் சொல்லிற்கு இலக்கணக் குறிப்பு

1. வினைத்தொகை
2. தொழிற்பெயர்
3. வியங்கோள் வினைமுற்று
4. வினையாலணையும் பெயர்

136. முல்லை நிலத்தின் உரிப்பொருள்

1. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
2. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
3. இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
4. ஊடலும் ஊடல் நிமித்தமும்

137. ‘காடு’ எனும் பொருள் தரும் பல சொற்களைக் கண்டுபிடி

1. அழுவம், கானகம், விடர்
2. சுரம், கான், நீகான்
3. பொதி, அடவி, பௌவம்
4. ஆரணி, வனம், பரவை

138. குடக்கூத்து என்று இந்நிகழ் கலையைக் கூறுவர்

1. கரகாட்டம்
2. காவடியாட்டம்
3. மயிலாட்டம்
4. ஒயிலாட்டம்

139. கல்வி ஏற்பாட்டைத் தொடர்ந்தும் சார்ந்தும் அமைவது

1. பாடக்குறிப்பு
2. பாடக் கற்பிப்புத் திட்டம்
3. பாடத்திட்டம்
4. கல்விக்கொள்கை

140. சொற்களஞ்சியப் பெருக்கத்தினை மாணவர்களிடையே வளர்க்க உறுதுணையாக அமையும் பாடம்

1. இலக்கணம்
2. செய்யுள்
3. கட்டுரை
4. உரைநடை

141. வீட்டுப்பணி என்பது இச்செயலோடு தொடர்புடையது

1. விழுமங்கள்
2. மதிப்பீட்டுச் செயல்
3. தொடர்செயல்
4. கற்பித்தல் குறிப்பு

142. பெஞ்சமின் புளூம் கருத்துப்படி, அறிவுக் களத்தில் இல்லாத படிநிலை

1. புரிதல்
2. பயன்படுத்தல்
3. அடக்குதல்
4. அறிதல்

143. கீழ்க்காணும் கூற்றுகளை கவனி. எது சரி? எது தவறு? கண்டுபிடி.

கூற்று A: பாடப்பொருள் அளவு கூடக்கூட
திறமையின் வலுவூட்டமும் மிகும்

கூற்று B: தகவல் இல்லா வெற்றுச் சொற்களால்
பாடப்பொருள் அமையும்

1. கூற்று A தவறு, கூற்று B சரி
2. கூற்று A மற்றும் B சரி
3. கூற்று A சரி, கூற்று B தவறு
4. கூற்று A மற்றும் B தவறு

144. இயற்கையை ஒட்டிக் கல்வி இருத்தல் வேண்டும், பள்ளி என்பது பூங்கா, குழந்தைகள் வளரும் செடிகள், ஆசிரியர் தோட்டக்காரர் என்ற ஒப்புமை மூலம் கற்றலில் குழந்தைகள் முக்கியம் என்றவர்

1. ரூசோ
2. ஜான்டூயி
3. காந்தியடிகள்
4. பிரோபெல்

145. இலக்கணம் கற்பித்தலுக்குச் சிறந்த முறை

1. ஒப்படைப்பு முறை
2. விதிவருமுறை
3. விரிவுரை முறை
4. நடிப்பு முறை

146. கற்றல் செயலின் வெற்றியையும், கற்றல் செயல் நிகழ்ந்துள்ள அளவையும் அறிய இத்தேர்வு உதவும்

1. புறவயத் தேர்வு
2. அடைவுத் தேர்வு
3. குறையறித் தேர்வு
4. நிலையறித் தேர்வு

147. பஞ்சதந்திரக் கதைகள் இவ்வகைக் கதைகளாகும்

1. இயற்கைக் கதைகள்
2. மோகினிக் கதைகள்
3. புராணக் கதைகள்
4. நகைச்சுவை கதைகள்

148. ஆழ்ந்த படிப்பு இத்திறனை வளர்க்கும்

1. படித்ததைச் சுருக்கி எழுதும் திறன் பெறுதல்
2. பிறர்துணையின்றி தாமே படித்துச் செய்திகளை அறிதல்
3. சொல்நயம் பொருள்நயம் உணர்தல்
4. வாய்க்குட்படிக்கும் திறனை வளர்த்தல்

149. கல்விநோக்கங்களின் அறிதல் பகுதியில், உட்கூறுகளில் இல்லாத பண்பு

1. பயன்படுத்துதல்
2. போலச்செய்தல்
3. புரிந்துக்கொள்ளுதல்
4. பகுத்தல்

150. 'வாய்மை' எனும் தலைப்பு இவ்வகைக் கட்டுரைகளாகும்

1. வருணனைக் கட்டுரை
2. கற்பனைக் கட்டுரை
3. சிந்தனைக் கட்டுரை
4. படக் கட்டுரை